உ

முருகன் துணை.

திருச்சிற்றம்பலம்.

நல்லைப்ந்தாதி.

இது

யாழ்ப்பாணத்து நவாலியூர்

திரு. க. சோமசுந்தரப்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

ஆக்கியோன் தமையனும் மாணாக்கனுமாகிய

திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால்

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமோதூதஷு மாசிமீ.

1931.

முருகன் துணை.

பதிப்புரை.

திருமகள் வளரு மருமணிப் பீடத்துத் திசைமுகன் தந்த இவ்வுலகில், நால்வகைத் தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதமான உயிர்கள் எல்லாம் கருமலக் கட்டுடையராதலின், அவைகள் அதனை நீக்கி, மலச்சார்பில்லாத் தனிமுதல்வனை யடைந்து அவன் திருவடிக்கீழ் வாழும் பேரின்பத்தை விழைதல் ஒருதலை. அவ்வான்மாக்களும் தந்தம் பக்குவங்கட் கேற்ப பலவித சமயநெறிகளினின்றும் கடவுளை வணங்கி அவனருள் பெறும். எச்சமயத்துறு பொருள்களையுந் தன்னுள்ளடக்கித் தான் அவற்றின் மேலாய அரசபதவி பெற்று வாழும் எமது சைவசமயமே மேலான சமயம் என்பதை நிலைநாட்டக் காலந்தோறும் எழுந்தருளிய பெரியார் அருண்மொழிகளே சான்றாகவிருக்கின்றன. அவ்வருண்மொழித் துணைகொண்டு கடவுளை நாடும் ஆன்மாக்களுக்குக் கடவுள் அவரவர் பக்குவங் கண்டு, அவரவர் குறிப்பு நோக்கி வேண்டிய காலத்து வேண்டிய அருள்வடிவங்களைக்கொண்டு அருள்செய்வர். அவ்வாறு எடுத்த வடிவங்களில் 'முருகன்' என்னும் வடிவமுமொன்று.

முருகன் என்னும் பெயர் "பேரழகையும் நறுமணத்தையும் கட்டிளமையையும் உடையோன்" எனப் பொருள்தரும். அசுத்த மாயையின்பாற்பட்ட மலை கடல் ஆண் பெண் ஆதிப் பொருட்களினிடையே மன்னி உலகத்திற்கு நல்வாழ்வின் பயனை உதவும் அழகினோடு ஒப்பதன்று எமது முருகப்பெருமான் அழகு. நூற்றெட்டு யுகங்களாக ஆயிரத்தெட்டெனுந் தொகையுடைய அண்டங்களை ஆளுந் தவவலி படைத்த சிவஞானியாகிய சூரனும் அம்முருகப்பெருமானின் பேரெழிலின்பெருக்கையுரைக்கமாட்டானாய் ஆயிரங்கோடி மன்மதர் அழகெலாம் 'ஒருங்கு திரண்டாலும் அப்பன் பாததாமரைக்கே போதாதென்றும், அப்பெருமான் திருமுடிமுதல் திருவடிவரையுள்ள எழில்நலத்தை ஊழிகாலம்

பார்க்கினும் கண்ணினாலும் கருத்தினாலும் அடக்க முடியாதென்றுங் கூறுவானேயாயின், பின் அவனழகை முற்றுங் காண்பார் உண்மைச் சிவயோகர் அன்றி வேறு யார்?

இனி நறுமணமுடையோன் முருகன். ஓர் பூவின்கணுள்ள மணம் வித்தினுட் சூக்குமமாயிருந்து முளையாய், இலையாய்ப் பின் மொட்டாய்க் கண்ணியாயுள்ள காலத்தும் வெளிப்படாது மறைந்தும், செஞ்ஞாயிற்றின் ஒளிபட்ட ஞான்று கட்டவிழ்ந்து மணம்வீசி வெளிப்பட்டும் இன்பம்பயக்கும். முருகனும் உயிரினில் உயிராய்மன்னிக் கல்வி கேள்வி சிந்தனை என்னுமரும்பாய்க் கண்ணியாய் மொட்டாய்ப் பின் குருவருளென்னும் ஞாயிற்றின் ஒளி புகுங்கால் அறிவிற்கறிவாய் வெளிப்பட்டு நறுமணம் வீசுவன். அதனாலன்றோ "பூவினுற்றம் போன்றுயர்ந்தெங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமையன்" என்பர் பெரியோர்.

இனிக் கட்டிளமையுடையோன் முருகன்.

உலகத்துப் பொருட்கள் நீர்மேற் குமிழிபோன்று நின்றுழி நில்லாதழிகின்றன. அறுகால் கிண்ட வாயிதழ் விரித்துக் காலையில் மலர்ந்து கடிமணம்வீசும் பொலன்பூ மாலைப்பொழுதில் மணமிலதாய் வாடி மடிதலைக் காண்கின்றோம். காயாமேனிக் கண்ணனை யொத்த இளம்புல் நீர் வற்றி நிறம்மாறி வைக்கோலாகின்றது. பொன்னிறமேனியும் புதுமதிமுகமும் வன்னத்தாமரை வடிவுறு வாயும், யாழுங் குழலு மியன்ற மழலையும், மாந்தளிரன்ன மணிநிறப் பாதமு மேந்திய குழவி, பாலனுங் குமரனுங் கிழவனுமாகி நரைதிரைவாய்த்துக் குரையொலிபெற்று மஞ்சுறழ் குஞ்சி பஞ்சினில் வெளுக்க, முத்துறு பல்லும் முற்றிய சுரையின் வித்துறக் கோலம் வேறுகின்றது. ஆனால் முருகப்பெருமானின் நலமோ என்றும் மூவாதிளமையி லிளமையா யின்றுங் குழந்தையாய் நின்று நிலவுகின்றது.

பூவின் மணம்போல நிற்றலின் திருமேனிச் சிறப்பும், கட்டிளமையில் ஆதியும் நடுவுமந்தமு மின்றிக் காலங்கடந்த கடவுட்டன்மையும், பேரெழிலில் உயிர்மலம் வீட்டி உடனிருந்தருளும் செயிர்தீர் காந்தச் செம்மையும், உடைமையாலன்றோ எம்பெருமானை முருகன் எனப் பண்டைப் பெரியோர் கூறினர். இவ்வருட்

கோலங்கொண்டது எற்றுக்கெனின் இருண்மல மயக்கிற் பட்ட உயிர்களை, மலமகற்றித் தம்மிடத்திழுத்துப் பிறவித் துன்பைத் துடைத்து அருட்பேரின்ப வெள்ளத்திலாழ்த்தற்கேயாம். அங்ஙனம் கருணையே வடிவினன் என்பதைக்காட்ட ஆறுமுகங்களுடன் வந்தபெருமானின் ஒருமுகம் உலகுக்கு ஒளிகொடுக்கும். ஒருமுகம் அன்பர்க்கு வரங் கொடுக்கும். ஒரு முகம் கற்றவர் புரியும் பூசையைக் காக்கும். ஒருமுகம் பக்குவமுடையோர்க்கருள்கொடுக்கும். ஒரு முகம் தீவினை புரிவோரைத் தண்டிக்கும். ஒருமுகம் இல்லற வாழ்வினின்பங் கொடுக்கும். இவ்வாறு ஆறுமுகங்களும கருணைத்தொழிலே பூண்டன. கருணையேவடிவான கடவுள் தம்மை வணங்கு மடியார்க்கு, வரங்கொடுக்க வீற்றிருக்குந் திருப்பதிகளளவிறந்தன. அவற்றுள் நல்லூர்ப் பதியும் ஒன்று. இந்நல்ல கடவுளைப் போல, இப்பதியிலேயுள்ள பூஞ்சோலையுந் நறுமணமும் பேரொளியும் படைத்ததாய், கடவுளின் திருவடி நீழலைப்போல் தண்ணிழல் பரப்பிப் பொலிந்து விளங்குகின்றது. இப் பூஞ்சோலையின் சிறப்பை ஆசிரியர் பல இடங்களில் இந்நூலில் கூறி யுள்ளார் எனினும் இனனும் சில சொல்லுவங்காள்,

தேமாவிளந்தளிர்கள் அலகிஞல்வீசியெசித்தசன் சின்னமிணிய [ள்
சின்னமூதக்களிகொள் அளிகள்யாழ்மீட்டிடச்சித்ரப்பசுங்கிள்ளைக
தாமாநுருவணம்பிற்பாட்டிசைத்திடச்சரணம்பெயர்த்தணிமயில்
தகுதகெனநடனமிடாமதூதுவரினசனங்கள்கண்டிருகரங்கள்
மாமாண்புடன்பழுவிறைற்றிடுமுடுமுடுமெனமத்தளங்கொட்டுபொழி
வாசமலர்வீசுபொழில்நல்லை—என்றும், [லார்

வாசமலர்மருதிலுறைபொற்றூர்பசுங்கிள்ளைவன்னத்திருப்பூவையை
வலிமிக்கபொல்லாதகலியுகத்தடியவர்கள்மனசுக்குகந்ததெய்வம்
நீசற்றுரைத்தியெனவமரர்குடிவாழ்வித்தநீலமயில்வாகனென
நிலமீதிலவனுறையுநல்லூரியாதென்னநீசொன்னதேயம்தெனத்
தேசுற்றமாவிளந்தளிர்கோதுபூங்குயில்கள்சிரமசைத்ததுசரியெனத்
தெய்வமயிலானந்தநடமாடுபூஞ்சோலை—என்றும்,

தூவாருமுட்புறக்கனிகீறிநறவொழுகுசுளையெடுத்தங்கொர்கடுவன்
குலுடையமந்திக்கருத்துபுநினைத்தினிமைசோதிக்கவாயில்விடுமுன்
ஆவாவிதென்னையோகுடிகெட்டகாரியமெமாறுமுகவடிவேலனூர்க்
கன்பொடுநிவேதியாதுண்கின்றதென்னையென்றம்மந்திகூறவஞ்சித்

தேவாதிதேவனேயென்பிழைபொறுத்தினியதிப்பழங்கொள்ளென்று
கை சிரமீதுவைத்தக்குரங்குதுதிபூம்பொழில்—என்றும்,

எமனோலைகண்டெள்ளிநகையாடவல்லமெய்யெம்பிரான்றொண்டரன்
பின் இனியபாற்காவடியெடுத்துவிளையாடிவரவிதுகண்டோர்முது
வானரம், தமரானபேர்களையழைத்தரசநீழலிற்றழையிறைப்பந்தரிட்டே
தடியொன்றிலேமயிற்பீலிகட்டிப்புயந்தாங்கவாவேசமாகித்
திமிதாதிமித்தியெனவிளையாடமற்றவைகள்செங்கரந்தொடைகொட்
டியே செயசெயவெனக்குரவைகொண்டாடுபொழில்—என்றும்

ஆசிரியர் வேறோர்பதிகத்துங்கூறியாங்கு செழுமையும்புதுமையும் நிறைந்துமிளிர்கின்றது. இவ்வாறு நல்லூரின்கண்ணே ஆறுமுகப் பெருமான் வீற்றிருந்து அடியார்க்கு நல்லருள் பாலித்துவருகிறார். தந்தையைப் போல மைந்தனும் பாமாலைக்கே பிரியராதலின், அவரைப் பாவாற்றுதித்து வணங்க விழைந்து இவ்வந்தாதியை எனது உள்ளிடங்காறு வன்பிற்குரிய நன்னிலைத் துணைவரைக் கொண்டு பாடுவித்தேன். பின் என்போல்வார் பிறரும் அப்பெருமான் புகழ்களை ஓதி நல்லருள்பெற எண்ணி இதனை அச்சிற் பதிப்பிக்க வேண்டியிருந்தேனுக்கு எனது அரிய நண்பரும் சுன்னாகம் யோகினி அம்மாள் தவப்புத்திரருமாகிய திரு. T. S. முதலியார் அவர்களும், இவ்வாசிரியர் நன்மாணாக்கருள் ஒருவரும் வட்டுக்கோட்டை வாசருமாகிய ஓவசியர் திரு. S. கந்தையாபிள்ளை அவர்களும் துணையாக நின்று நற்பொருள் உதவினார்கள். இவர்கள் சிவதொண்டின்கட் பூண்டிருக்கும் ஆர்வம் பெருகி தவநெறி படர்ந்து முருகன் திருவருள்பெற்று நிறைந்து வாழ அப்பெருமானைப் பன்முறை வணங்குகிறேன்.

இருகம,
கடுகணவை.
10—2—31.

அடிமை,
க. வேலுப்பிள்ளை.

திருச்சிற்றம்பலம்.

நல்லையந்தாதி.

காப்பு.

முத்த பிள்ளையார்.

ஆதியு மந்தமுங் காணாத நல்லை யறுமுகன்மேல்
ஓது நறுந்தமி ழந்தாதி நூறு முரைப்பதற்கு
வேத முதற்பொரு ளாயரு ளாகி வினைகெடுக்குஞ்
சோதி விநாயகன் செந்தா மரைத்தாட் டுணைதுணையே.

நாமகள்.

புள்ளிக் கலாப மயில்வா கனன்நல்லைப் புண்ணியன்மேல்
விள்ளுஞ் செழுந்தமி ழந்தாதி மாலைக்கு மெய்த்துணையாம்
வெள்ளைக் கமலமும் பாவாணர் நாவு மெனவினையேன்
உள்ளக் கமலமும் நீங்காது நிற்கு முரைமகளே.

குரு.

தவயோ கருந்தொழும் நல்லையில் வாழுந் தமிழ்முருகன்
சுவையோங் கியகவி மாலை தொடுக்கத் துணைபுரியும்
பவயோக காரண மாகு மிருண்மலப் பற்றறுத்த
சிவயோக நாதன் மணிவாய் மலர்ந்த திருமொழியே.

நூல்.

திருவுஞ் சிறப்புநற் செல்வமு நல்கியத் திமலத்தால்
மருவும் பிறவிப் பிணிக்கு மருந்தும் வழங்குகின்றான்
குருவுந் தொழுந்தெய் வமுமாகி நல்லையிற் கோயில்கொண்ட
பொருவும் உயர்வு மிலாமுக மாறுடைப் புண்ணியனே. (௧)

புண்ணிய மெத்தனை கோடிசெய் தேனுல கம்புகழும்
விண்ணியல் பூம்பொழில் நல்லையிற் சோதிவை வேற்பெருமான்
எண்ணிய வண்ண மருளுந் திருவடி யின்றுகண்டேன்
மண்ணியல் மானுட யாக்கையு மின்பம் வழங்கியதே. (௨)

வற்றாப் பிறவிப் புணரிபுக் கார்முன்னை வல்லிவினைநோய்
பற்றார் மிடியிற் பயமடை யார்பக ரேர்திவரின்
சற்று திறுமெஞ்ச மஞ்சா ரெழில்நல்லைச் சண்முகவேள்
கற்றார் விழுங்குங் கழற்சே வடிகண்ணிற் கண்டவரே. (௩)

கண்ணா றிரண்டிந் திருமுக மாறுங் கதிர்முடியுந்
தண்ணார் கருணை முழுவதுந் தையலர் பாகமுமாய்
விண்ணா டருந்தொழும் நல்லை வியன்பாற் கடனுடேவ
உண்ணா வமுதுண்டு கண்டாற் பிறவி யொழிந்திடுமே. (௪)

ஒண்ணித் திலநகை வேல்விழி மாதர்க் குடற்றொழுப்பு
பண்ணித் திகைக்கின்ற பேதைநெஞ் சேபசுங் காந்தளம்பூங்
கண்ணிக் கதிர்மணித் தோளெம்பி ரான்நல்லைக் கந்தனை
எண்ணிக் கிடந்திகண் டாயின்பஞ் சேரு மிருமைக்குமே. (௫)

மைவந்த கண்டத்தர் மைந்தா கதிரை மலையிலன்பர்
கைவந்த அற்புத ஞானக் கலைக்கற் பகக்கனியே
மெய்வந்த தொண்ட ராகர வோசை மிகுந்தநல்லை
உய்வந்த வொண்சுட ரேயில்லைத் தஞ்ச முனையன்றியே. (௬)

முட்டிப் பொருளுரை யாவே தியனை முடிகுலுங்கக்
குட்டிச் சிறையிட்ட நல்லைக் குமாரனைக் கும்பிடுவோர்
துட்டக் கடாவில் வருமந்த கற்குந் துயர்க்குமஞ்சார்
இட்டப் படிபுசிப் பார்திருப் பாதத்தி னின்பத்தையே. (௭)

பத்துத் தரத்தரக் கன்சிரந் தத்தப் பகழிவிட்ட
கத்துக் கரத்தத்த ஞர்மரு கா நல்லை நாயகனே
சத்துத் தரங்கக் கடலும் மலையும் கலங்கநின்று
தத்துந் தனிமயின் மேல்வந்து தீர்த்தருள் சஞ்சலமே. (௮)

சஞ்சலந் தீர்த்தெனை யாளென்று நின்றுன் சரணடைந்தால்
அஞ்சலென் றென்றருள் செய்யாத வாறென்னை யன்றிமையோர்
வஞ்சகர்க் கஞ்சிக் குறையிரக் கக்கொன்று வாழ்வருளும்
கொஞ்சும் மொழிவள்ளி கொண்டாடும் நல்லைக் குருபரனே. ()

பாரோத வேத்த பரிபுர பங்கய பாதமென்றன்
சிரமேறு நாளு முளதாகு மோசெந்தி மாநகரும்
வரமேறு நல்லையுங் கந்த வனமு மகிழ்ந்துறையுங்
குரவேறு பன்னிரு தோளா வமரர் குலமணியே. (௧௦)

மணியே மணிக்கு ளொளியே யொளியில் மருவிநிற்கும்
அணியே யணிதிகழ் நல்லையிற் றோன்று மருமருந்தே
குணியே குணப்பெருங் குன்றே கருணைக் குரைகடலே
பணியே னுனையன்றிப் பூமிசை வேறு பரதெய்வமே. (கக)

தெய்வானை கேள்வனைச் செங்கோட்டு வெற்பனைத் தேவர்தொழும்
மைவரை கனகை மணிகண்டன் மைந்தனை மன்னுயிர்கள்
உய்வா னெழுந்தனை நல்லையில் நிற்கு முயிர்க்குயிரை
மெய்வாய் மனத்திற் றொழுவார்க்குப் பேரின்ப விடெளிதே. ( )

விடார் விழைவும் வெகுளியும் மாறும் மெய்யானெறி
நாடா ரியாவரு நன்மைசெ யார்நல்லை நற்பதியைக்
கூடார் கரங்குவி யார்முரு காவென்று கூவிநிதம்
பாடாரி ருக்கென்ன பேரென்ன யாதும் பயனில்லையே. (கங)

பச்சைப் புரவிக் கருங்கடல் மேலே பருதியென
அச்சத்தை நீக்க எதிர்வரு வானவ் வசுரனுரக்
தைச்சுக் கிழித்துக் கடலைக் குடித்த தனிநெடுவேற்
கொச்சைக் குறத்தி மணவாளன் நல்லைக் குலவிளக்கே. (கச)

விக்கி யுரைதடு மாறி விழியுங் கருகிமையுங்
கக்கிப் புரண்டு கலங்கித் தவிக்கின்ற காலத்திலே
கொக்கைத் தறித்து மலையைப் பிளந்தகூர் வேலுடனே
பக்கத்தில் நின்றருள் வான்நல்லை நாயகன் பாதங்களே. (கரு)

பாட்டுக் குருகுந் தமிழ்முரு கையன் பலபுகழைக்
கேட்டுக் குதுகுலங் கொண்டுயி ரேனினை யோடமரர்
வேட்டுத் தொழுநல்லை யம்பதி மேவி வினைவினைக்கும்
பூட்டுக்கு நல்ல திறவென்று மெய்ந்நூல் புகன்றிடுமே. (கசு)

புள்ளு மொலித்தன சேவலுங் கூவின பொய்கிருளும்
மெள்ள விடிந்தது நல்லையி லன்பரும் மேவிவிட்டார்
புள்ளிக் கலாப மயிலுமுன் வாயிலிற் போந்ததினிப்
பள்ளி யெழுந்தருள் வாய்பர மானந்தம் பங்கிடவே. (கள)

பந்தித்த மும்மலத் தொந்தத்தி னல்வரும் பல்பிறப்பிற்
சந்தித்த தீவினை தீர்த்தெனை யாளத் கருணையையா
குந்தித் துயிருண்ட மான்மரு காநல்லைக் கும்பகம்பத்
தந்தித் தனித்தொந்தி யைங்கர னுக்குச் சகோதரனே. (கஅ)

தனக்தா வழகு சடக்தா வுலக சகலசுக
வினக்தா வெனவுன்னை வேண்டிகி லேன்இரு தாள்மறவா
மனக்தா நல்லூர்க்கு வரும்வரந் தாவென்று வாழ்த்துகின்றேன்
வனக்தா வியபுன வள்ளிக்கு வாய்த்தகன் மாணிக்கமே. (௧௯)

மாதா வயிற்றி லினிப்பிற வாத வரமெனக்குத்
தாதா திருநல்லைத் தாதா வெனவுனைத் தானிரந்தால்
ஓதா திருக்க முறைமையுண் டோவொளி கொண்டகுழைக்
காதா கருணைக் கடலே சிவானந்தக் கற்பகமே. (௨௦)

பகலு மிரவு மிறப்பும் பிறப்பும் பரிவுமின்பும்
இகலும் விருப்பும் மறப்பு நினைப்பு மில்லாவிடத்தே
புகலும் புதுநலம் தந்தாள்வ தென்று புகன்றிடுவாய்
அகலும் சுருக்கு மறியா நல்லூரி லசஞ்சலனே. (௨௧)

சரணங் குகாமுரு காசண்மு காவென்று சாற்றியுன்றாள்
அரணம் புகுந்தவ ரஞ்சுவ ரோசொ லறுமுகமோ
மரணம் புகுந்து வருத்திடு மோநல்லை வாழுவந்த
கரணங் கடந்தென்று மாயரு வாய்நின்ற காரணனே. (௨௨)

கற்றான் திருத்தி வனமுறு கோட்டிக்கை நாற்றிமுடி
மேற்றாவி காட்டித் தசைகொண்டு வெய்க்கு விளங்குயிக்தச்
சேற்றான் அருத்தி இழியுமுன் னேவந்து தோன்றிடுவாய்
கூற்றார் குறுகா வகைநல்லை வந்துனைக் கும்பிடவே. (௨௩)

வேளுநேர் வைத்திய நாதன் மகன்நல்லை வேற்பெருமான்
பாழூர்க் குழியிற் பயில மருந்து பகருகின்றான்
கேளீ ரனைவரும் வம்மின்க ளோவந்து கேட்டுப்பெற்று
நாளுறா முன்னுண்ணு வீர்காளை நம்முடை நாளல்லவே. ( )

நானென்றுங் காமுரு காமுரு காவென்று நாடுகின்றால்
ஏனென்று கேட்கத் திருவுள மின்னு மிரங்கிலையே
வானென்று சோலை வயல்நின்று நல்லை வளம்பதிவாழ்
தேனென்று மாமொழிக் குஞ்சரி தோள்புணர் சேவகனே. ( )

சேலார் வயலணி நல்லை யறத்தனிச் செல்வியருள்
பாலா வொருவரம் பாலிக்க வேண்டும் பகட்டெருமை
மேலாரு மந்தகன் வந்து வருத்திடும் வேளையிலே
வேலாயு தாவென்று கூப்பிடு வேனெதிர் மேவுதியே. (௨௬)

தில்லைத் தனிப்பெருங் கூத்தனுக் கன்று செவிசிறையத்
தொல்லைத் தனிமறை சொல்லிய வாதுயர் போயகல
நல்லைத் தனிப்பதி நாடி வணங்குயிந் நாய்க்குமொரு
சொல்லைத் தரவுள்ள மோகள்ள மால்தொழுஞ் சுந்தரனே. ( )

தஞ்ச முனையன்றி வேறில்லை நீலத் தனிமயிலூர்த்
தஞ்ச லெனவந்து தோன்றிடு வாய்நல்லை மேவுலையா
வஞ்சகன் நெஞ்சகங் கீறி யமரரை வாழவைத்த
கஞ்ச மலர்முகத் தாய்நல்லை யம்பதி காவலனே. (௨௮)

காவலர் கொண்டு கழல்பணி யேன்கன்னித் தண்டமிழால்
பாவலர் சூட்டிப் பரவுகி லேன்பண்பு சற்றுமிலா
ஏவல ரைவருங் கேவல் புரியு மெளியனுக்குன்
சேவடி காட்டுதி யோநல்லை வாழுஞ் சிவக்கொழுந்தே. (௨௯)

கொழுந்தே யெழுதுங் கடம்பணி நல்லைக் குமரனென
மொழிந்தே னவன்திரு முன்புநின் றேன்றொழு தாவெனவே
விழுந்தே னெழுந்துவை வேற்படைச் சோதி விளக்கங்கண்டேன்
அழுந்தே னனது குலமேழும் நாலு மறுநரகே. (௩௦)

அருவா யறிவுக் கறிவா யருளா யகிலமுமாய்க்
கருவா யுயிர்க்குயி ராயிரு கண்மணி யாகிநின்ற
மருவார் பொழிலெழில் நல்லை யமரும் மறைக்கொழுந்தே
குருவா யினிவரு வாய்தரு வாயுன் குரைகழலே. (௩௧)

கள்ளப் புலன்களின் வஞ்சனை நீக்கிக் கருவிகளை
மெள்ள வடக்கி மனத்தை நிறுத்தி மெய்யாமறிவால்
உள்ளத் துணர வுணர மறைவா யொழுகுகின்ற
வெள்ளத் தனியமு தந்நல்லை யூரில் வெளிப்பட்டதே. (௩௨)

பயனற்ற சிற்றின்ப வாழ்வினை வேண்டிப் பலபிறப்பும்
மயலுற்ற அட்டனை யீடேற்று வாழுமறங் கொண்டருளுங்
கயலுற்ற சூரற்கு மம்பொற் கழலளித் தாண்டுகொண்ட
கயலுற்ற கண்ணிமைத் தாநல்லை ஞானக் களஞ்சியமே. ( )

கல்லா தவனரு ளில்லா தவனக் கனவிலும்மெய்
சொல்லா தவன்வெகு பொல்லா தவனெனத் தூரவிடேல்
இல்லா தவர்க்கே யருள்வது நீதி யிணையில்நல்லைச்
செல்வா திருப்பரங் குன்றத்து நித்த செழுஞ்சுடரே. (௩௪)

செந்தா ரருத்தி யிளவண்டு கிண்டிடத் தேனொழுகிப்
பைந்தார்க் கமுகை வளர்க்கின்ற நல்லைப் பதிப்பதிவாய்
வந்தேன் மணிக்கோ புரந்தொழு தேனென் வலியவினை
தந்தேன் விடையென் றொருகோடி காதங்கள் தப்பினதே. ()

பிறவா வரம்பெற வேண்டும் வினையாற் பிறந்துவிடின்
இறவா வரம்பெற வின்றொரு சூழ்ச்சி யியம்புகின்றேன்
நறவார் செழும்பொழில் நல்லையில் நாயகன் நாண்மலர்த்தாள்
மறவா திருந்திடு விர்மீட்டு மில்லை மறுபிறப்பே. (௩௬)

மறந்தும் மறந்தும்வெங் காமக்கள் ளாட்டில் வருந்துமெனைச்
சிறந்தநின் சேவடி சிந்திக்க வைக்கத் திருவுளமோ
துறந்துன்னை வேண்டுந ருள்ளமுக் நல்லைத் தொழுகுலமும்
அறந்தழை வெய்த வெளிப்பட்ட சிற்கு மறுமுகனே. ()

அண்டா தவர்க்கு மருள்கின்ற செவ்வே ளமருநல்லைக்
கண்டா மணிக்கோ புரத்துக்குத் தெற்கினிற் கண்டுகொண்டேன்
தண்டா மரைமுக மாறும் சரணமும் தண்டையும்மால்
கொண்டாடும் வேலும் மயிலு மடியவர் கூட்டமுமே. (௩௮)

கூர்வேலுஞ் சேவற் கொடியு மிரண்டு கொடியிடையார்
சேர்வேல் விழித்தெய்வ மாதரு மாய்ச்சித் திரகடனக்
கார்மா மயின்மிசை முன்வர வேண்டியிக் காசினியில்
ஆர்வேறு மெய்த்துணை யாவார் திருநல்லை யாண்டவனே. ()

வந்திக்கச் சென்னியும் வாழ்த்திட வாயும் மறதியின்றிச்
சிந்திக்க நெஞ்சமுங் கேட்கச் செவிகளும் சேவித்திடக்
கந்திக்குஞ் சோலை யணிநல்லைக் கோயிலும் காதலுடன்
தந்திட்ட நான்முகன் காணக்கண் ணாயிரந் தந்திலனே. (௪௦)

தண்டுகொண் டண்டர்கண் டோடமண் டிச்சம ரிற்றலைகள்
விண்டுருண் டண்டங்க ளெண்டிசை யுஞ்சிந்த வேலெறிந்து
கண்டதுண் டங்கண்ட தண்டையஞ் சிலம்பணிக் கால்முருகன்
தொண்டர்மொண் டுண்டிடப் பாறிட நல்லையிற் றோன்றுவனே.

ன்னக் கலப மரகதச் சித்திர மஞ்ஞையின்மேல்
ன்னற் சுடியிடைக் கன்னிய ரோடு வெளிப்படுவாய்
ன்னக் கொடியிடை மாடங்க ளோங்கி யணிமருதச்
ங்கெற் கழனி புடைசூழும் நல்லைச் சிவதெய்வமே. (௪௨)

தெய்வ முனையன்றி வேறில்லை யென்று தெளிந்துவிட்டேன்
மெய்வரு வேதனை தாங்குகி லேன்வினை யேனெனையாள்
பைவரு பாம்பும் பகிரதி யும்பரித் தார்விழியும்
கைவரு நல்லையும் போலென் மனத்துங் கலந்தவனே. (௪௩)

கல்லாண் திண்டவை வேலுண்டு கார்மயிற் றோகையுண்டு
குல்லை நறுந்தொடைத் தோளுண்டு சேவற் கொடியுமுண்டு
சில்லிக் கிண்கிணிச் சேவடி யுண்டு செகந்துதிக்கும்
நல்லையு முண்டினி யில்லைப்பொல் லாத நடுக்கங்களே. (௪௪)

நந்தா விளக்கை யழியாத செல்வத்தை நாளுமுண்டு
வந்தாலுஞ் சற்று முவட்டா வமுதை மதுரமென்றும்
சிந்தாத தேனை நறும்பாகைக் கட்டியைச் சீர்கொள்நல்லைக்
கொந்தார் கடம்பணி சிந்தா மணிதனைக் கூறுமினே. (௪௫)

கூறாத நாவுங் குனியாத சென்னியுங் கோதில்புகழ்
ஏறாத காதுங் குவியாக் கரமு மெனக்களித்தான்
மாறாத வைம்புலச் சேட்டையுங் கூடி வருத்துகின்ற
ஆறாத துன்பு மறவென்செய் வேன்நல்லை யானந்தனே. (௪௬)

ஆனே றுகைத்த பெருமான் மயத்திலும் அண்டர்தொழும்
மானேறு வேல்விழி மங்கை மடியிலும் மஞ்சுதவழ்
கானேறு சோலைநல் லூரிலும் சேர்முரு கன்மலர்த்தாள்
தேனூறத் தெள்ளமு தூற வாயூறிடத் தித்திக்குமே. (௪௭)

தித்திக்கு மாங்கனிக் காகத் திமிதிமி தித்தியெனத்
தத்தித் தனிநடஞ் செய்யுங் கலாபத் தனிமயில்மேல்
கத்துங் கடல்சூ ழுலகம் வலம்வந்த கான்முளையே
முத்திச் செழுங்கனி யேநல்லை வாழும் முருகையனே. (௪௮)

முருகார் கடம்புஞ்செங் காந்தளு மீறிரு மொய்ம்புமம்பொற்
றிருவா பரணச் சிறப்பும் வைவேலுந் தெரியக்கண்டேன்
அருகாரும் பூங்குயில் தீந்தமிழ் பாட வணிமயில்கள்
குருகார வாரஞ் செயவாடும் நல்லையங் கோட்டத்திலே. (௪௯)

கோவாத முத்த மருளுங் குறிஞ்சிக் குறத்திதனை
மூவா விளநலங் காட்டிமுன் னாண்ட முருகையனே

ஆவா யிகவலத் தேன்வினை யேன்அஞ்சி னேனடியேன்
வாவா வெனஅழைப் பாய்நல்லை யார்தொல்லை வானவனே. ( )

வண்டாடு தண்டலை சொல்லெடூ நல்லை வளப்பதியிற்
கண்டார மணியொலி கேட்கின்ற தன்பீர் கதிகவப்பின்
தண்டா மலப்பிணி தீர்க்கு மமுதசஞ் சீவிதந்துப்
பண்டார மூலத் திறந்தது வாரிப் பருகுயினே. (௫௧)

குமரா சரணம் குழகா சரணம் குலவுநல்லை
அமரா சரணம் அழகா சரணம் அலந்தவர்க்குத்
தமரா சரணஞ் சரணமென் றேநண்ணடைக் கால்தொழுதேன்
எமரா சனுமவன் தூதரும் வந்தினி யென்செய்வரே. (௫௨)

செய்யும் பழவினை யினை இருமல் திகைப்பிளைப்பு
ஐயும் வலிப்புச் சுரம்சன்னி யெல்லா நலிப்புக்கெல்லாம்
கைகண்ட நல்ல மருந்துண்டு நல்லைக் கடிநகர்வாய்
ஐயன் திருமஞ் சனமாடுந் தீர்த்தத் தகழியிலே. (௫௩)

அகந்தைக் கிழுக்கை யகழ்ந்தமுக் காழ்பூக் கானவமா
மிருக்கெய்த் தெனைவருத் தாவகை தாமணி வீதிநல்லை
யுகந்துத் தமர்விழி வாய்ப்புகுங் குள்ளத்தி லோடியுயிர்
புகுந்தெத் துயரமும் போக்குஞ்சீ வானந்தப் பொன்னடியே. ( )

பொற்பூரும் நல்லைப் பழப்பதி வாய்ப்பொன்னங் கோயிலின்வா
கர்ப்பூர தீபத்துட் கண்டுகொண் டேன்கண் ணுளன் ஜோமணியை
அற்புத முள்ளத் தருளுற ஆறு மருவியெழும்
சிற்பூ ரணபர தத்துவ ஞானத் தெளிவினையே. (௫௫)

தெள்ளி யெடுத்து வடித்துத் தெளித்த செழுந்தமிழை
அள்ளி யெடுத்துச் செவியிடை யூற்று மருணகிரி
வள்ள லெடுத்துப் புகழ்ந்தநின் காரலை வேலவனே
புள்ளி மடத்த மயின்முரு காநல்லைப் பூரணனே. (௫௬)

பூவை படிக்கப் பசுங்கிளி பாட்டின் பொருளுரைக்கும்
காவை யுடுத்த மணிக்கோ புரந்திகழ் காமர்நல்லை
மாவை யிணுவை வளம்பதி கந்தவ னம்பயிலும்
தூவயில் வேற்குமர ராதுன்பி னின்றென்னைத் தாக்குதியே. ( )

தூக்கி யெடுத்து மடியிற் கிடத்தித் துடைத்தெமது
பாக்கிய மேமுத்தந் தாவென்று கொஞ்சிப் பலவுயிரு
மாக்கிய வம்மை முலையமு தூட்டு மழகனையோ
மேக்குயர் நல்லைக் கிழவனென் றோதும் வியனுலகே. (௫௮)

உடம்பிடிச் செங்கைக் குமரேச வள்ள லுருணெடுந்தேர்
நடம்பிடித் தோங்குந் திருநல்லை வீதி தனில்வருமால்
வடம்பிடித் தீர்த்திட வம்மின்கள் வம்மின்கள் தொண்டரெலாம்
இடம்பிடித் திட்டிருப் பீர்வீடு நல்கும் இணையடிக்கே. (௫௯)

இனிநான் பிறந்திட மாட்டேன் இரக்க முடையமலர்க்
குனிவார் கனைகழல் கூட்டிவைப் பாய்நல்லைக் கும்பிடுவேன்
பனிவா ரிமையப் பருப்பதப் பச்சைப் பசுங்கொடிக்குக்
கனியே யெனக்கிரு கண்ணே யொளிதருங் கண்மணியே. ()

மணிக்குங் குமத்தடந் தோளா குறத்தி மணாளவெனக்
கணிக்கும் பெருந்தவக் கற்புடை யோர்கள் கலங்குவரோ
பிணிக்கும் மிடிக்கும் பகைக்கும் பிறக்கும் பிறவியெலாந்
துணிக்குந் திருநல்லை யூரா சிவசிவ சண்முகனே. (௬௧)

கன்றுமன் றுடைய கரும்பினிற் பூத்துக் கமலமலர்த்
தன்றுன்று தெய்வச் சரவணப் பொய்கை தனிலுருவாய்
விண்ணூன்று தேவர் பயங்கெடுத் தாண்ட விசாகற்கிடம்
பண்ணின்ற சோலை பயில்குயில் நல்லைப் பழநகரே. (௬௨)

பதிக்கின்ற நெஞ்சிலும் நல்லைப் பதியிலும் பாவலர்கள்
துதிக்கின்ற சொல்லிலும் வீர னுளத்திலும் தோகையிலும்
உதிக்கின்ற செம்பொற் சதங்கைச்செஞ் சேவடி யோரிரண்டும்
மிதிக்கின்ற வந்தகன் நெஞ்சிலு மென்றன் வினையிலுமே. ()

மேலுண் டெனவெண்ணி வீணே வருந்தலிர் மின்னனையார்
பாலுண் டவர்கள் பவமுண்டு முட்டுண்ட பண்ணவர்கள்
மாலுண் டசுரா ருயிருண்ட நல்லையில் வானவன்கை
வேலுண்டு பின்னை வினையில்லை என்பது மெய்ப்பொருளே. ()

பொருளைப் பொருளென் றறிய விடாதபொல் லாமலத்தின்
இருளைக் கெடுத்தினி யென்றிடு வாய்மெய்ம்மை ஞானசுகத்

திரளை விழுங்கிச் செழுந்தயி ரூக்கிச் செவியிற்றந்துன்
அருளை விழுங்கு புகழூர னுறைநல்லை யாண்டகையே. (௬௫)

ஆர்த்துணை யத்தனன் வந்தா லணிதிக ழும்பொன் நல்லை
யூர்த்துணை யோங்கொளி வேல்துணை ஒருரு காவெனுமோர்
பேர்த்துணை பேரா யிரமுடை யானடி பேணுமன்பு
சேர்த்துணை வன்துணை பஞ்ஞைருது ணைத்துணை சேவனுமே. (௬௬)

சேணுத்து மால்வரைப் பைம்புனத் தேதெய்வ வள்ளிதரும்
தேனுக் கினியடி யுந்நல்ல வோசெந் தமிழ்க்கவிஞன்
தானும் பிறரும் தழைத்திடத் தந்த தமிழ்நல்லைநா
வானுந்து பொன்முடிக் கோபுரம் சேர்நல்லை மன்னவனே. (௬௭)

மரணம் வருமென்று கற்றதுங் கேட்டது மன்றியிந்தத்
தரணி தனிற்கண் ணிற் கண்டும் விரைந்து தவம்புரியா
தரணை மெனமண்ணும் பொன்னும் விரும்பி யலமருமித்
திரணை னெனக்குமுண் டோவருள் நல்லையிற் றேசிகனே. (௬௮)

சிவசிவ ஓங்கும நாயக மவென்று செப்புகிலேன்
நவமலர் தூவிப் பணிகின்றி லேன்நல் லவர்கள்சொன்ன
தவநெறி மேற்கொண் டொழுகுகி லேன்நல்லை சாருகிலேன்
பவநெறி நீக்கும் பதம்முரு காவெங்ஙன் பாலிப்பையே. (௬௯)

பாரேறு நல்லைப் பதியிற் பழவடி யாருடனே
தேரேறி யாறு முகப்பெரு மான்வரச் சேல்விழிகள்
நீரேற வாடை நிலமேற நீலக் குழலவிழ
வாரேறு கொங்கை பசப்பேற நின்றுள் மதிநுதலே. (௭0)

மருந்தும் மணிமந் திரமும் பிணிமிடி மாற்றுவதற்
கருந்தும் விருந்து மிரவும் பகலு மருந்துணையும்
திருந்தும் முருகன் திருநாம மென்றினித் தேறிவிட்டேன்
வருந்துந் துயராறுக் கும்நல்லை குய்பிட்ட மாத்திரையே. (௭௧)

திக்குக ளெட்டுஞ் செவிடுப டத்திக் கயம்வெருவ
உக்கிர நச்சுர கத்தலை யாட வுலகுதவழ்
மைக்கடல் வாய்விட மும்மூல மாய விருள்விடியக்
கொக்குரு வாகிய நல்லையிற் குக்குடம் கூவியதே. (௭௨)

கூனற் பிறையணி பிச்சைப் பிராற்குக் குருமணியக்
கானக் குறவள்ளி நாயகி யாற்கிரு கண்மணிமேல்
வானத் தவர்க்கு மகுடகு டாமணி மற்றெமக்கு
ஞானத்தை நல்கு நவமணி யாம்நல்லை நாயகனே. (எங)

காதல. மனைவியு மக்களு மொக்கலு நானுமுன்றன்
போதார் பொழில்நல்லை போற்றுகின் றோமுனக் குப்பொருந்தும்
ஏதாவ தொன்றெமக் கீயத் திருவுள்ள மின்னுமிரங்
காதா கடாக்ஷமுங் காதர காதாங்கங் கடந்தவனே. (எச)

கருவி யடக்கிப் புலனைந்தை யுங்கட்டிக் கண்ணறிவால்
மருவி யுயிர்க்குயி ராய்நிற்கு நின்னை மதித்திடுங்கால்
உருகி யுருகி யுணர்வி னொழுகுசெந் தேறலுன்னைப்
பெருகி மலர்சிக் கறுகின்ற தின்பம் பிறக்கின்றதே (எரு)

பிறவாத யாக்கைப் பெரியோன் செவியிற் பிரநறியா
மறைவா னுரைத்த மறைவா சகந்தர நீமறுத்தால்
குறவா குறத்தி கணவா பரைச்சி தருகுமரா
மறவாத நல்லை வணிகா வெனவுன்னை வைதுவனே. (எசா)

வைதா ரையுமன்றி வல்லாடி முன்னின்று மாறுசமர்
செய்தா ரையுமவர் தீவினை தீர்த்தருள் செய்திடுவாய்
ஐயா வறுமுகவா முருகா நல்லை யாறிரண்டு
கையா வடியே னெனக்கருள் செய்யக் கருத்தில்லையே. (எஎ)

கருத்தி லிருத்தி நினைக்க நினைக்கக் கசிந்துகசிந்
தருத்தி பொருத்தி யினிக்க வினிக்க வன்றெறிவருந்
திருத்து சிவானந்தத் தேனே திருநல்லைச் சேர்வுந்த
ஒருத்த செருத்தணி வாசா வடைக்கல முன்றனுக்கே. (எஅ)

உடையவ னேநல்லை யுத்தம னேகூ ருடம்பிடிக்கைப்
படையவ னேகாற் படையவ னேபடைப் போனைக்குட்டி
விடையவ னுக்கு மறைமுதல் கூறிய மேலவனே
கடையவ னேனடி யேனுன் னடைக்கலங் காத்துக்கொள்ளே. ()

கொள்ளுங் கொடுந்தொழிற் கூற்றுவன் வந்து குறுகுமுன்னே
புள்ளி மயின்மிசை நீவந்தென் னுள்ளே புகுந்திடுவாய்

அள்ளற் கமலத் தடைமே வியாமை யொரைந்தடக்கி
வெல்லுந் தவத்தினர் போற்றுயில் கூர்நல்லை வேலவனே. (௮௦)

வேலா சரணம் விசாகா சரணம் விளங்கிறையோன்
பாலா சரணம் பரனே சரணம் எனப்பணிவேன்
காலாறு மேழுமைந் தூங்கடந் தப்பால் நறுங்கொளியாய்..
மேலா யுயிர்தொறு மாய்நல்லை மேவிய வித்தகனே. (௮௧)

வித்தின்றித் தோன்றி வினையின்றி யென்றும் விரிந்துயலத்
தொத்தின்றிப் பூத்துத் துயரின்றிக் காய்க்குமோர் தூயதருக்
கொத்தொன்று பூவார் குளிர்பொழில் நல்லை குலவுங்கண்மர்
பத்தொன்று பத்தர்க ளெவம்மின் ஞானப் பழமுண்ணவே. (௮௨)

பங்கப் பழனத் தமூக குழூபடைச் சால்வழியே
சங்கக் குலஞ்சுடர் முத்தீனுஞ் செல்வத் தனிநல்லைவாய்ச்
செம்பொற் றிருக்கைச் சுடர்வேற் குமரனைச் சேவித்தபேர்
அங்குற் பவித்துவின் றாண்டுபின் வீடு மடைகுவரே. (௮௩)

அடையார் புரஞ்செற்ற கொற்றத்து நெற்றிக்க ணப்பருக்குஞ்
சடையார் தவமுனிக் குஞ்சொன்ன ஞானத் தமிழ்ப்பொருளில்
உடையாய் சிறிதெனக் குத்தால் வேண்டு முயர்மறையோர்
இடையா ரொலிமலி நல்லையில் வாழ்கிரு பாகரனே. (௮௪)

கருவா தனைக்கும் உருவாரு மைம்புலக் கள்ளர்தரும்
பெருவா தனைக்கும் பிணிக்கும் மிடிக்கும்பே ராசையெனும்
ஒருவா தனைக்கு முருகா வுனைத்தொழ நல்லைதனில்
வருவா ரடியி லருக்குகள் நல்ல மருந்துகளே. (௮௫)

மங்கல ஆரிய மார்க்கச்சந் தேங்க மணியியம்ப
என்கு மரகர வோசை முழங்க வெழுந்தனனால்
நங்கள் குலகுரு கப்பெரு மானல்லை நாதனருள்
தங்கும் பழவடி யீர்வம்மின் கண்டு தரிசிக்கவே. (௮௬)

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யுஞ் சிறியனுக்கு
மற்றின்ப மீய வழக்கில்லை யென்னில்அவ் வல்லகரன்
பெற்றின்பம் வாழக் கருணைசெய் தானும் பிரானென்பரால்
முற்றின்ப மீய முறையுண்டு நல்லை முழுமுதலே. (௮௭)

முழுமுத லேயொரு முப்பத்து மூவர்க்கும் மூவருக்கும்
வழிமுத லேநான் மறைமுத லேயென் வழுவுதலால்
பழிமுத லேசெயும் பாவியை யாவி பதியுமுன்னுள்
குழுமுத லேயுற்ற தொண்டர் தொழுந்தில்லைக் கோமளமே. ( )

கோலா கலகல பத்தோகை மேலே குருச்சுடர்கள்
மேலா லுதித்தெனப் பேரொளி யோடு வெளிவருவான்
காலா றினங்கள் களியா லுதாவு கடிபொழிற்சூழ்
சாலேறு சாலி வயலேறு தில்லையிற் றற்பரனே. (௮௯)

பஞ்சேசெஞ் சீறடி மஞ்சே கருங்குழல் பாற்கடல்வாய்
நஞ்சே கயல்விழி யென்றுநல் லாரை நயந்திடீ
மஞ்சேர் பொழில்தில்லை யுறைசெங்கி லாய்வடி வேலெங்கிலாய்
அஞ்சாத வெற்றி மயிலெங்கி லாய்பின்னுங் கார்துணையே. ( )

ஆங்காரம் நீங்கி யறிவை யறிவா லறிந்தடங்கித்
தூங்காமற் றூங்குந் துரியமெய்ஞ் ஞானச் சுகநிலையில்
ஓங்கார மாகி யொளியா யொளிக்கு ளொளித்திடுவான்
பாங்கான தில்லைப் பதியி லறுமுகன் பாருங்களே. (௯௧)

பாரினி லைம்பெரும் பூதங்க ளாகிப் பகன்மதியாய்ச்
சேரா ருயிராய்த் துணையா யுடனாய்த் தொலைவிடமாய்
ஆராயு மெய்ப்பொரு ளாயம்மை யாகப்ப முருகதில்லை
வாரா வுனைநம்பி னேன்காத் தருளுத லுன்கடனே. (௯௨)

கந்தா முருகா குமரா வழகா கயற்கண்ணம்மை
மைந்தா விசாகா மயிலா வயிலா மலைக்கிழவா
செந்தார்க் கடப்பா நடப்பா வியவருட் செல்வதில்லை
எந்தாய் இறைவா மறவா வரந்தா எழுமைக்குமே. (௯௩)

குன்றாத முத்தமிழ்ப் பாவலர்க் கின்பங் கொடுப்பவனீ
என்றார் எழுத்துப் பதம்பொருள் யாப்பணி என்பவற்றுள்
ஒன்று மினுநான் றறியாத வேழை யுரைத்ததமிழ்
அன்று மினுந்தில்லை யெம்பெரு மான்கேட் டருளுதியே. (௯௪)

அன்னையு நீயெனக் கப்பனு நீயருந் தோழனுநீ
என்னையு நீயென் துணைவரு நீஇல்லும் மக்களுநீ

முன்னையு நீகல்லை யட்ட கிரியின் முருகனுநீ
பின்னையு நீதரு வாயுனைப் போற்றும் பிறவிகளே. (௯௫)

பித்தா வெனச்சொன்ன வக்கிர விற்பெருக் காதுசென்ற
மெய்த்தேவ தேவன் மகனென் றுனக்கு விளம்புகின்றேன்
அத்தா அரகர சண்முக போற்றியென் றன்பர்தொழும்
புத்தேர் பொலிகல்லை யூராமெய்ஞ் ஞானப் பொலன்சுடரே. ()

பொய்யற்ற கீரன் முதலாகுஞ் சங்கப் புலவர்தன்
தெய்வத் திருத்தமி ழூறிடுஞ் செல்வத் திருச்செவிவாய்
கையுற்ற மெய்ப்பொருட் கற்பக மேகல்லைக் கந்தவென்றன்
பொய்யுற்ற புன்கவி யுட்பெறு மோவோர் புகலிடமே. (௯௭)

புல்லாது புல்லும் மலப்புணர்ப் பால்வரும் புல்லறிவால்
கல்லாத நாயேன் புனைந்த கவியிற் கலந்துவரும்
எல்லாப் பிழையும் பொறுத்தின்ற சேயியம் பும்மழலைச்
சொல்லாகக் கொண்டு துயர்கெடுப் பாய்கல்லைத் தூயவனே (௯௮)

தூவாருஞ் சோதி முகமாறும் மூவிரு தோள்களுமென்
பாவாரும் பன்னிரு கேள்வியும் பாவையர் பாகங்களும்
தேவாரும் வேலும் மயிலுஞ்செஞ் சேவலும் சேவடியும்
பூவாரும் பொன்கல்லை யூருமெந் நாளுமென் புந்தியவே. (௯௯)

புத்திக்கு மைந்து புலனுக்கு முன்னுயிர்ப் போதத்திற்கும்
அத்திக்கில் நிற்கினும் கல்லையிற் காண வமர்ந்திருக்கும்
சித்தித் தனித்தெய்வ மேயருள் வாயடி சேருமட்டும்
தித்தித்த செந்தமி ழாலுனைப் போற்றுஞ் செழுந்திருவே. (௧௦௦)

வாழிய வாறு முகம்பன் னிரண்டு மலர்க்கரங்கள்
வாழிய கூர்வேல் மயில்வா ரணக்கொடி மாணடியார்
வாழிய வள்ளியும் யானையும் வீரனும் வான்கழலும்
வாழிய கல்லையந் தாதியீ நாளும் வழிவழியே.

திருச்சிற்றம்பலம்.

கல்லையந்தாதி முற்றும்.

...அடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY